
# லக்ஸ்
# திரைப்பட விழா

02/04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிப்பவர் பட்டியல்
சுவர்ணா மல்லவாராச்சி
ஹேமசிறி லியனகே
ஜயசிறி சந்திரஜித்
அனோமா ஜனதாறி
தெனவக்க ஹாமினே
புத்ததாஸ விதானாராச்சி
றுக்மல் நிரோஷ்
மல்கம் மாசுடோ
சேன நாணயக்கார
பிரசாத் சூரியாராச்சி

கதைவசனம் - நெறியாள்கை
அசோகா ஹந்த கம

தயாரிப்பு
ஜயசமன விஜேசேகர

படப்பிடிப்பு
பால் விக்ரமாராச்சி

இசை
றோஹன வீரசிங்க

கலை நெறியாள்கை
றொஜர் செனவிரத்ன

படத்தொகுப்பு
எல்மோ ஹலிடே

## கதைச் சுருக்கம் - சந்தகின்னேரி (நிலவுப்பெண்)

இக்கதை கீழ் மத்திய தரவர்க்கப் பின்னணியில் பின்னப்பட்டதாகும். தர்மே என்னும் இளைஞன் வேலையற்றிருக்கும் நந்தா என்னும் தன்மனைவியோடு பொருளாதாரக் கஷ்டம் மிகுந்த பரிதாபத்துக்குரிய வாழ்க்கையுள் தள்ளப்படுகிறான். ஏற்கனவே நாலு பிள்ளைகளின் தகப்பனான அவன், மனைவி மீண்டும் கர்ப்பவதியாக இருப்பதை அறிந்து, அவளுடைய செயல்தான் குடும்பம் மேலும் மேலும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படக் காரணம் என்பது போல் அவளை அடிக்கிறான்.

சுற்றுவட்டாரம் முழுக்க கடனாளியான தர்மே, போதாதற்கு மதுவுக்கும் அடிமையானதால், நோய்வாய்ப்பட்ட வயதுபோன அவனது தாயாருடன் ஏழுபேர் கொண்ட அவனது குடும்பம் சொல்லொணா துன்பத்துள் வீழ்கிறது. அவனது அற்ப வருமானத்தால் குடும்பத் தேவையின் அழுத்தங்களை தாக்குப்பிடிக்க முடியாததால் குடும்ப அமைதி கெடுகிறது. அதன் தொடராக அவன் மனைவியோடு சதாபோடும் சண்டை அவர்களுடைய வாழ்க்கையை இறுகவைக்கிறது. பொருளாதாரக் கஷ்டங்கள் பற்றிய கதைகள், தேவைகள், சண்டை ஆகியனவே அவ் வீட்டின் அற்ப இடைவெளியை நிரப்புவனவாய் உள்ளன.

மனைவியை அடித்த அடுத்த நாள், வீட்டின் அவலமான நிலைமையை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர தனது சம்பளத்தில் எஞ்சியுள்ளவை போதாதென்பதை தர்மே அறிகிறான். தான் எடுக்க முயன்ற முதல் நடவடிக்கையே தோல்வியுற, துன்புற்ற மனநிலையில், உன்மத்தம் கொண்டவனாய் தண்ணீர் தொட்டியின் உச்சியில் இருந்து பாய்ந்து இறந்துபோகிறான்.

அவனோடு நந்தா வாழ்ந்த வாழ்க்கை மிகப் பயங்கரமானதாக இருந்தபோதும் அவன் இறந்துபோனான் என்றதை அறிந்த மறுகணமே அவள் தனது கையறு நிலைப்பட்ட தனிமையையும் வாழ்தலிலிருந்து சகிக்கமுடியாத முறையில் அகற்றப்பட்டுவிட்டதாகவும் உணர்கிறாள். அவளுக்கு அதை நம்பவோ அதனோடு சமரசம் செய்து கொள்ளவோ முடியவில்லை. சுத்துமிட்டு அவனோடு சண்டை பிடுவதே அவர்கள் வாழ்க்கையை ஒன்றிணைக்கிற ஒரே ஒரு தொடர்பாடலாக பின்னணி இருந்தது. ஒருவரோடு ஒருவருக்கிருந்த கசப்புணர்வே அவர்களின் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு விடையளிப்பதாய் இருந்தது.

அவன் அவளின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தான். அவளை அவளின் உடல் ரீதியான உறவிலிருந்து காப்பாற்றிய அவன் மரணம், அவளை அதல பாதாளத்திற்கு தள்ளுவதைத் தவிர்த்தது. அவளுடைய சமத்தன்மை முற்றுமுழுதாக அவளிடமிருந்து சரிந்துபோயிற்று. அவனோ அவளோ உணர்வு ரீதியாகவோ, ஆத்மார்த்த ரீதியாகவோ விவாக பந்தத்தில் கட்டுப்படவில்லை.

இறுதியாக, அவன் அடக்கஞ் செய்யப்பட்டு அவனது பௌதீக வாழ்க்கையின் அடையாளம் எல்லாம் அற்றுப் போன பின்னர், அவள் உடல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் தன்னையே இழந்து தான் இல்லாமையான நிலையால் விரக்தியுற்று களைப்படைகிறாள். மிகுந்த பொருளாதார அழுத்தமும் ஒழுக்கச் சீர்கேடும் அவர்கள் வாழ்க்கையில் புகுந்து, விவாக பந்தத்தினாலே பெற்றார் என்ற வகையிலோ அவர்களின் ஆத்மார்த்த இணைவு நடைபெறாமல் செய்துவிடுகிறது.

தர்மேயும் நந்தாவும் வழமைப் பிரகாரம் திருமணம் செய்தவர்களேயொழிய திருமண ரீதியாகவோ ஆத்மார்த்த ரீதியாகவோ ஒன்றிணையவில்லை. தர்மேயின் உடல் ரீதியான தொடர்பு இழக்கப்பட்டதன் பின் அவனோடு இணைந்திருந்த கலியாண வாழ்க்கையில் எந்த விதமான பற்றுதலையும் கொண்டிராத அவள், இதற்குமேலும் ஆத்மார்ந்த ரீதியாக அவனை அவள் வாழ்க்கையில் அனுமதித்து இடந்தரப்போவது என்பது நடைபெறப் போவதில்லை.

## நிலவுப் பெண்
## (கடற்கன்னி)

இந்த நாட்டின் அரசியல் அரங்குகளில் கதைக்கப்படும், விஷயங்களில் ஒன்றாக இலங்கை சமூகத்துப் பெண்கள் அடக்குமுறைக்குள்ளாக்கப்படுவது இருப்பதில்லை. இது பிரதான சமூகப் பிரச்சினையாக இருந்தாலும் மிக முக்கிய தீர்வுக்குரிய பாராளுமன்றத் தேர்தல்கள் இன்னும் முக்கிய அரசியல் சமூகப்பிரச்சினைகள் தொடர்புபட்ட - விஷயங்களில் செல்வாக்கு குன்றியதாகவே இருக்கிறது. பெண்கள் விடுதலை தொடர்பாக புதிய தரிசனத்தோடு தொடங்கும் இப்படம், பொதுவாக பெண்களை வறுமைக்குப்புறம்பான புதிய கோணத்தில் நம்மை பார்க்கத் தூண்டுகிறது.

கலந்துரையாடலுக்குரிய பல விஷயங்கள் இப்படத்தில் தரப்பட்டுள்ளன. ஒரு தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண் எதிர்பாராத விதமாகத் தனது கணவனின் சவப்பெட்டியை காணும் போது ஏற்படும் உணர்வின் சிக்கல்கள் ஒரு அதீதத்தன்மையுடைய உருவத்தில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் பல எதிர்பார்ப்புகளும் ஆவல்களோடும் தொடங்கும் அவள் வாழ்க்கை அன்றைய நாள் முடிவில் அவள் சாதிப்பது வெறும் ஏமாற்றத்தையே. எந்தவித சுரத்துமற்று அவளுடைய வாழ்க்கை இழுபடுகிறது. அது பலவிதமான முறையில் குடும்பத்தின் மையமாகக் கொள்ளப்படும் கணவனையே சுற்றி வருகிறது. அவள் அவனை வெறுக்கிறாள். காரணம் அவளுடைய முழுவாழ்க்கையுமே அவனால் பாழாக்கப்படுகிறது. அதே நேரத்தில் அவனை விரும்புகிறாள். காரணம், அவனே அவளுக்கு உணவளிக்கிறான். அவன் மூலமே அவள் குழந்தைகள் பெற்றாள். அவர்களுக்காகவே அவன் வேலை செய்கிறான். எதிர்பாராத விதமான அவனது சாவு பேரிடி போலவே அவளைத்தாக்குகிறது. காரணம் அவளது பொருளாதார அடிப்படையே அதனால் சிதறிப் போகிறது. படிப்படியாக அவள் தான் ஆணாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றதை உணரவே அவளது மிகுதி வாழ்க்கை தன்னதிகாரத்தைக் கொண்டதாக இயங்குகிறது.

பொதுவாக படத்தில் இவர்கள் நாளாந்த வாழ்க்கை தொடர்பான அனுபவங்கள் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தப்படும் போது, பார்வையாளர்கள் எவை எவையெனலாம் அடக்கு முறையென உணர்கிறார்களோ அவற்றையெல்லாம் அடையாளங் கண்டு விளங்கிக் கொள்ளும் நிலைக்கு இட்டுச் செல்லப்படுகிறார்கள்.

சர்வதேச
லக்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் பூரணையில் மரணம் (புரஹந்த கலுவற)

## கதைச்சுருக்கம்

கடும் வரட்சியாலும் இனப்போராலும் அந்த நிலம் பீடிக்கப்பட்டுள்ளது. காட்டின் ஓரத்தில் இருக்கும், அந்த ஏரி அனேகமாக வரண்டு போயுள்ளது. அதற்கு சில மைல்களுக்கப்பால் ஏழைக்கிராம மக்களின் பிள்ளைகள் கொடிய உள்நாட்டுப் போரினால் இறந்து கொண்டிருக்கின்றனர். அந்தக் குளத்தில் எஞ்சியுள்ள நீரை அள்ளிக் கொண்டிருக்கும் குருட்டு வயோதிபரான வன்னிஹாமிக்கு விரைவில் மழைவரும் என்று தெரியும். சிறிது நாட்களுக்குப் பின்னர், ஓர் பூரணை தினத்தில் இறந்துபோன அவரது மகனின் உடல், ஓர் சீல் வைத்த சவப்பெட்டியில் வைத்து இராணுவத்தினரால் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. மழை பெய்யும் அன்றைய நாளில் தான் பண்டாரவின் உடலும் புதைக்கப்படுகிறது. போரில் இறந்த மகனுக்கு நஷ்ட ஈடாக அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பணத்தை உத்தரவாதம் செய்யும் பத்திரங்களில் கையெழுத்திடுவதற்கு வன்னிஹாமி மறுத்துவிடுகிறார்.

அரவது இளைய மகளான சுனந்த தந்தையின் சொல்லை ஏற்றுக்கொண்டு ஆடைத் தொழிற்சாலையில் வேலையொன்று தேடிக்கொள்கிறாள். அதனால் அவளுடைய காதலன் சோமே, அவளுடைய விவாகமான மூத்தசகோதரி யமுனா, உள்ளூர் அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோர் அனைவரும், பத்திரங்களில் கையெழுத்திடுமாறு வன்னிஹாமியை நிர்பந்திக்கின்றனர். பண்டார இறந்து மூன்று மாதத்திற்குப் பின்னர் வரும் வழமையான அன்னதானச் சடங்குக்கு கொடுக்க வேண்டிய உணவுக்காக எங்காவது பணம் பெற்றாகவேண்டும். செங்கற்கள் செய்யும் தனது வேலையின் மூலமாக சோமேக்கு கிடைக்கும் வருமானம் சிறுதொகையே. அவனும் முன்னர் பண்டார செய்தது மாதிரி, நல்லமுறையில் வாழவேண்டுமானால் இராணுவத்தில் சேர்ந்து கொள்வதே சரி என்று உணர்கிறான். உள்ளூர் பௌத்த பிக்கு, நாட்டுக்காக தன் உயிரை விட்ட மைந்தனின் பேரில் ஞாபகத் தூபியொன்று கட்டுவதற்கு விரும்புகிறார்.

வறுமையின் காரணத்தால் குருடாகிப் போன மக்களின் அழுத்தத்திற்கும், நாளாந்தம்படும் கஷ்டத்துக்கும், குண்டுகளுக்கு பலியாவதைத் தவிர வேறொன்றும் சாதிக்க முடியாத வெற்று வீரப் பிரதாபங்களுக்கும் முகங்கொடுக்கும் வன்னிஹாமி கண்கள் பார்க்கக் கூடியவற்றுக்கு அப்பால் தெரியும் உண்மையைத் தரிசிக்கும் தெளிந்த அறிவை கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய மகனின் சீல்வைத்து புதைக்கப்பட்டிருக்கும் சவப்பெட்டியை கிண்டியெடுத்து திறப்பதற்காக மண்வெட்டியை எடுக்கிறார். இதன் மூலம், நஷ்டஈடு கொடுக்கப்படுவதை கோர முடியாமல் செய்யலாம் என்று அவருக்குத் தெரியும். ஆனால் இதற்கும் மேலாக அவரது முக்கிய நோக்கம் என்னவெனில் யுத்தம் அவரது மகனைக் கொல்ல முடியாது என்று நம்புவதே.

பிரசன்ன விதானகே

பிரசன்ன விதானகே 1962 ல் பிறந்தார். பாடசாலையை விட்டு விலகியதும் அவர் நாடகத்துறையில் ஈடுபாடுகொண்டார். அவர் பேர்னாட் ஷோவின் Arms and the Men என்ற நாடகத்தை 1986லும் டாறியோ ஃபோவுடைய Strawberries and trumpets ஆக்கத்தை 1991லும் மொழிபெயர்த்தார். அவர் தனது சிசில கினி கனி (உறை பனியில் நெருப்பு) என்னும் முதலாவது திரைப்படத்தை

நெறியாள்கை செய்து 1992 இல் வெளியிட்டார். அது இலங்கையின் ஒன்பது OCIC விருதுகளைப் பெற்றது. அது சிறந்த நெறியாளர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் ஆகியவற்றுக்கான விருதையும் பெற்றது. அவரது இரண்டாவது திரைப்படமான ஆனந்த ராத்திரிய (ஆத்மாவின் இருண்ட இரவு) 1996 ல் தயாரிக்கப்பட்டது. அதை அவரே எழுதி நெறியாள்கை செய்தார். இது பல சர்வதேச திரைப்பட விழாவில் பங்கு பற்றியது. முதலாவது பூசன் (Pusan International) திரைப்பட விழாவில் பங்கு பற்றி, ஒரு ஜூரியின் விசேட குறிப்புரையைப் பெற்றது.

1996 ல் இலங்கை திரைப்பட விமர்சகர் மன்றத்தின் பிரதான (Sri Lanka Film Critics Forum Awards) விருதுகளைப் பெற்றதோடு சிறந்த படத்துக்கும் சிறந்த நெறியாள்கைக்கும் சிறந்த திரைக்கதை வசனத்துக்குமான விருதுகளையும் பெற்றது. இவரது மூன்றாவது படம் பவுறு வலலு (சுவர்களுக்குள் சுவர்). இது 1997ல் பூர்த்தியாக்கப்பட்டது. இதில் வயலட்டாக வரும் நீத்த ஃபெர்னன்டோவுக்கு சிறந்த நடிகைக்கான விருது 1998 ல் சிங்கப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில் வழங்கப்பட்டது. 1998ல் இலங்கை விமர்சக மன்றத்தால் (Sri Lanka Film Critics Forum) வழங்கப்பட்ட பதினொரு விருதுகளில் பத்து விருதுகளை இது வென்றெடுத்தது. இதற்குள் சிறந்த படத்துக்கான, சிறந்த நெறியாளருக்குமான விருதும் அடங்கும். இவரே எழுதி, இவராலே நெறியாள்கை செய்யப்பட்ட புறஹந்த கலுவர (ஓர் பூரணையில் மரணம்) 1997 ல் பூர்த்தியாக்கப்பட்ட இவரது நாலாவது ஆக்கமாகும்.

நடிகர்கள்

ஜோ அபேவிக்ரம (வன்னிஹாமி)

பிரியங்கா சமரவீர (சுனந்த)

வின்ரன் செமகே (சோமே)

மகேந்திர பெரேரா (அரச அலுவலர்)

நயன்ன ஹெட்டியாராச்சி (யமுனா)

குமார கருணானந்த (யமுனாவின் கணவன்)

ஹார்ஷெமித் அபேசூரிய (அவர்களின் மகன்)

கே. ஏ. மில்ரன் பெரேரா (பள்ளிக்கூட ஆசிரியர்)

எம்.டி.மகிந்தபால – படப்பிடிப்பு நெறியாள்கை

ஏ.சிறீகர் பிரசாத் – படத்தொகுப்பு

சே. ஏ. மில்ரன் பெரேரா – கலை நெறியாள்கை

சபேற் விஜேசிங்க – ஒப்பனை

ஜயசுதா – ஒலிப்பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின்
# நிதானய
# (புதையல்)
## கதைச் சுருக்கம்

இரவு வெகுநேரம் கடந்திருந்தவேளை, நடுத்தர வயதுடைய ஒருவன் (வில்லி அபேநாயக்க), தனது படுக்கையறையிலிருந்து, தனது கடைசி பாவ ஒப்புக் கொள்ளலை எழுதிக் கொண்டிருந்தான். நான் உங்களுக்கு கதையொன்றைச் சொல்ல முயலவில்லை அவன் சொல்கிறான். மாறாக என்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கும் குற்ற உணர்விலிருந்து விடுபெறுவதற்காகவே நான் இதை எழுதிக் கொண்டிருக்கிறேன். பாவ ஒப்புக் கொள்ளலின் முடிவில் அவன் தன்னையே கொலை செய்வதற்கு தீர்மானிக்கிறான். அவன் தன்னுடைய கடந்தகால வாழ்க்கையை மீட்டுப்பார்க்கும் போது, அவன் எத்தகைய மனிதனாக இருந்திருந்தான் என்பதோடு அவனைப் பிடித்தாட்டிய வேட்கை, அவனை ஆட்கொண்டிருந்த தீய சக்திகள் அவனை எவ்வாறு அழிவுக்கு இட்டுச் சென்றன என்பன பற்றியெல்லாம் எம்மால் யூகிக்கக் கூடியதாக உள்ளது.

இவற்றுக்கெல்லாம் காரணம் காட்டுப்பகுதியில் கற்பாறைக் குகையில் புதையல் இருப்பதாக கூறிய பல்நூற்றாண்டுகளுக்கு முந்திய கவடியைப் அவன் படித்ததே. யாராவது ஒருவர் நரபலி தருவதற்குத் தயாராய் இருந்தால் அக்கற்பாறைக் குகையின் புதையல் எடுப்பதற்கான வழிதிறபடும். அந்த ஓலைச் சுவடி, பலி கொடுப்பதற்கான ஆளையும் இடத்தையும் மிக நூணுக்கமாக விபரித்திருந்தது. பலி கொடுக்கப்பட வேண்டிய ஆள் ஒரு இளம் பெண்ணாக இருப்பதோடு நாடி, கழுத்து ஆகியவற்றில் நிரையாக மச்சம் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.

ஓலையைப் படித்ததிலிருந்து அந்தப் பெண்ணையும் இடத்தையும் கண்டு அடையவேண்டுமென்பதே வில்லியினுடைய வாழ்க்கையை அரித்துக் கொண்டிருக்கும் வெறியாக மாறியது. கற்குகையைக் கண்டுபிடிப்பது இலகு. ஆனால் அந்த இளம்பெண் எங்கே இருக்கிறாள்? அப்படியான பெண் உண்மையில் வாழ்கிறாளா? அல்லது இது அவனுடைய குழம்பிப்போன மனதின் வெறும் கற்பனையா? அவளை அவன் பூந்தோட்டங்கள், குளக்கரைகள், கோயில்கள், படத்தியேட்டர்கள், ஆகிய எல்லா இடங்களிலும் தேடுகிறான். இந்த ஐதீகப் பெண் அவன் கனவுகளில் தோன்றி அவனை இம்சைப் படுத்துகிறாள்.

கடைசியாக அவன் மனோவியாதியில் வீழ்ந்துவிடுவானோ என்ற பயமே, அவளை பூரணமாக தன் மனதிலிருந்து அப்புறப்படுத்திவிட வைக்கிறது. ஆனால் ஒரு ஆற்றங்கரையில் தோணிக்காக காத்துக் கொண்டிருந்தபோது, அங்கே அவள், ஓலைச் சுவடியில் கூறப்பட்ட அந்த பெண், நாடியிலும் கழுத்திலும் மச்சங்களோடு, காற்று வெளியிலிருந்து திடீரென உண்டாக்கப்பட்டவள் போல் நிற்கிறாள்.

## தீர்த்தயாத்ரா (தீர்த்தயாத்திரை)
## வசந்த ஓபேசேகராவின் திரைப்படம் பற்றி ஒரு குறிப்பு

வசந்த ஓபேசேகராவின் திரைப்படமான தீர்த்தயாத்திரை அவரது முன்னைய திரைப்படங்களிலிருந்து அதன் கதை ரீதியாகவும் கருப்பொருள் ரீதியாகவும் வேறுபட்டுச் செல்கிறது எனலாம்.

உண்மையான வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து அருட்டுணர்வு பெற்று எழுதப்பட்ட இவ்விவரணைகள் கொண்டாடப்படுவதற்குரிய காரணம், அவை வெளிப்படுத்தும் ஆற்றல், இன்னும் குற்றம்புரியும் உணர்வு நிலைகள் அவற்றின் உளவியல் சமூக, அரசியல் ஆகியவை உள்ளடங்கியவற்றின் நாடகமயப்படுத்தலே. தொழில் நுட்பரீதியாக ஓபேசேகரா, பன்முக அடுக்கு முறையென்று அவரால் கூறப்படும் முறையை பாவித்து இறந்தகாலம், நிகழ்காலம் எதிர்காலம் என்பவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுவர, படிமங்களையும் ஒலியமைப்பு முறைகளையும் ஆக்கரீதியாக அருகருகே வைத்து, நேரடியான தெளிவான கதைசொல்லல் அல்ல என்னுடையது என்பதை தெளிவாக்கியுள்ளார். இந்த வகையில் வழமையான இலங்கை படத்தயாரிப்பாளர் மத்தியிலிருந்து வரும் ஒரே ஒரு பரிசோதனைக்குரிய நெறியாளர் இவரே.

துண்டு துண்டாக கதைகள் சொல்லப்படும் முறையை ஜனரஞ்ச வாசகர்கள் சந்திக்கும்போது, அதில் வரும் காட்சிகள் தர்க்க முரண்பாடுடையவையாக அவர்களுக்குத் தெரியும். இதனால் குழப்பம் விளையலாம். உண்மையைச் சொல்வதானால் இதற்கு நேர்மாறானதே நடந்திருக்கிறது. திரைக்கதை எழுதுவதில் திறமை மிக்கவரான ஓபேசேகரா தனது பல்வகை அடுக்கு உத்தி முறையை பாவித்த தன்மையானது, சிக்கலை அவிழ்க்கும் விடுகதை போல் செய்யப்பட்டுள்ளதால், நேயர்கள் கதையை இனங்கண்டு கொள்வது சாத்தியமாகிறது. இதனால் வர்த்தகரீதியாகவும், உயர்தர ரசனை ரீதியாகவும் வெற்றிபெறுகிறது.

இன்னும் உணர்ச்சிமிக்க, உண்மைக்குப் புறம்பான நாடகபாணித் திகில் கதைகள் எழுதுபவர் ஓபேசேகரா என்று எடுத்துக் கொள்வது தவறு. ஜனரஞ்சக் கூறுகள் அவருடைய கதைகளில் இருந்தபோதும் சிக்கலான,

வழமைக்குமாறான உறவு முறைகளை ஆய்வு செய்வதாக அவை இருக்கும். இந்த அவலத்தில் இருந்து மீள்வதற்கான வழியாக வன்முறை, கொலை, மரணம் ஆகியவையே உள்ளன.

வசந்தா ஓபேசேகராவின் புதிய படத்தில், அவரது படங்களுக்குரியவையாகச் சொல்லப்படும் எவையும் இல்லை. இதில் வன்முறை இல்லை. உடல் ரீதியான செயற்பாடு, சாவு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வன்முறை என்பது இன்னொருவகையாக உள்ளது. காதாநாயகிக்கு ஏற்படும் மன அழுத்தம்; சாவு என்பது கூட உடல் ரீதியானது அல்ல. அது உணர்வுபூர்வமானது; ஒரு மத்தியதர வர்க்க செல்வந்தக் குடும்பத்தின் ஒரே ஒரு பிள்ளையாக வளர்க்கப்பட்ட ஒரு இளம் பெண் திடீரென தான் தத்தெடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளையென்பதை அறிகிறாள். அவளுடைய முன்னைய தந்தை, தாய், அவளுக்கு வரப்போகும் கணவன், அவளுடைய நண்பர்கள் ஆகியோரோடு இருந்த உறமுறை ரிதறிப்போகிறது. அவள் மேல் கொட்டப்பட்ட எல்லாவிதமான அர்ப்பணம், அன்பு யாவும் வீணாய் போகின்றன. இப்போ கசப்பும் பகைமையும் உறவு முறைக்குள் நுழைகின்றன. இவற்றில் மிகத் தீவிரமானது அவளை மணக்க இருப்பவன் எடுக்கும் நிலைப்பாடு. அதாவது அவளுடைய சமூக அந்தஸ்து இப்போ, சமூக வாழ்க்கையில் வெற்றி பெற்ற மேல்தட்டு மத்திய தரவர்க்க சட்டத்தரணியின் கௌரவத்துக்குரிய மகளல்ல. அவள் யார்? அவள் யாராக இருக்க முடியும்? ஒரு நாடோடியின் மகளாக தள்ளிவைக்கப்பட்ட சாதியிலிருந்து வருபவளாக இருக்கலாம். இத்திரைப்படம் அவளது உண்மையான தாய் தந்தையரை தேடிக் கண்டுபிடிக்கும் பயணத்தினதும் இறுதியில் தனது அடையாளத்தை கண்டு பிடிப்பதினதும் ஆவணமாக உள்ளது. ஒபேசேகரா அவளது பூர்வீகம் பற்றிய தேடலில், தனது பன்முக அடுக்கு உத்தி முறைகளான முன்னுக்குபோகும் (Flash Forwards) பின்னுக்கு நகரும் காட்சிகள் (Flash Backs) அதி கற்பனாக்காட்சிகள் ஆகிய எவற்றையும் கைவிடவில்லை. இறுதிக் காட்சி வரும்வரை எல்லாவற்றையும் இறுக்கி வைத்திருக்கிறார். அவளுடைய இரட்டை சகோதரியை இறுதியில் எதிர் கொள்ளுதல் எல்லாம் சேர்ந்து வெறும் கற்பனாவாத மாயைகளை அழித்துவிடுகிறது. உண்மை வெளிப்பட துன்பமயப்பட்ட தேடுதல் முடிவுறுகிறது.

படப்பிடிப்பு நன்றாகச் செய்யப்பட்டுள்ளது. நடிப்பு நன்றாக உள்ளது. உண்மையில் இந்தப்படம் முதன்மைப் பாத்திரத்தை ஏற்று நடித்துள்ள யசோதா விமலதர்மவுக்கே உரியது. சமகால சமான்யத்தன்மையுடைய திரைப்படக் குப்பைகளின் மத்தியில், வசந்த ஒபேசேகரா பார்வைக்கு அழகு தரும் துன்பத்தில் வீழ்ந்துள்ள மக்கள் பால் இரக்கப்படும் மனிதாபிமான செறிவுடைய தனித்துவமான படத்தை ஆக்கித்தந்துள்ளார். அதனால் தான் கவிஞன் சொல்லியுள்ளான்; அனுதாபப் படுதலிலேயே கவிதை இருக்கிறது.

கலாநிதி : லெஸ்ர ஜேம்ஸ் பீரிஸ்

நடிகர்கள்
யசோதா விமலதர்ம
ஜோ அபேவிக்ரம
திரைக்கதை வசனம், நெறியாள்கை
வசந்தா ஒபேசேகர
இசை
பிரேமசிறி ஹேமதாஸ

## சாகரஜலய
## (மணல்மேல் எழுத்து)

இலங்கையின் கரையோரத்தை அண்டிய ஓர் தனிமையான கிராமம், அங்கே காய்ந்து வெடித்திருந்த நிலம், வரண்டுபோன குளம் களவாகத் திரியும் மரணத்தின் வருகையை எதிர்வு கூறுவனபோல் இருந்தன. இத்தகைய வறுமையின் நிலவரத்தை ஹீன் கெலிக்கும் (இப்பாத்திரமாக நடிப்பவர் சுவர்ணாமல்லவராச்சி) அவளது பிள்ளைக்கும் நேரும் விதியின் மூலம் நாம் கண்டு கொள்கிறோம். இத்தனைக்கும் காரணம் அவளது கணவனுடைய திடீர் அகாலமரணமாகும். இதனால் அவள் தனது அனாதரவான பிள்ளையோடு எதிர்வரவுள்ள சவால்களுக்கு முகம் கொடுக்கிறாள். ஹீன் கெலியின் சந்தோசமான கடந்த காலம் தற்போதைய இருண்ட பின்னணியில் அழுத்தமுடன் காட்டப்படுகிறது.

ஹீன் கெலிக்கும் அவளுடைய பிள்ளைக்கும் ஒரு செல்வந்த வியாபாரிகள், செல்வத்துள் திளைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் பாரம்பரியமாக வரும் கற்பு பற்றி ஹீன் கெலிஸ் எதுவும் தெரிந்திருக்காதபோதும் அவளுடைய இயல்பான நல்ல நடத்தையின் பலம் அவளை அந்த வியாபாரியின் ஆக்கிரமிப்புக்குள் விழாது பாதுகாக்கிறது.
தன்னைச் சுதாரித்துக்கொள்ள வைக்கும் அவளுடைய இந்த கடும் நடத்தையே அவளை ஏனையோரிடமிருந்து பிரித்த வைக்கிறது.

நெறியாள்கை – சுமித்ரா பீரிஸ்

திரைக்கதை – லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ்

படப்பிடிப்பு – டொனால்ட் கருணாரத்ன

இசை – டபிள்யு. டி. அமரதேவா

தொகுப்பு – லால் பியசேன

நடிகர்கள் :

சுவர்ணா மல்லவராச்சி

ரவீந்திர ரந்தெனிய

சுனேத்ரா சரச்சந்திர

எச். ஏ. பெரேரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவ துக்க பவகர்ம

கதைச்சுருக்கம்

பவ துக்கவும் பவகர்மவும் (வாழ்தலின் துயர்–பாகம் ஒன்றும், பாகம் இரண்டும்) ஆகிய இத்திரைப்படங்கள், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் (சிலோன் என்று அழைக்கப்பட்ட) அக்கால இலங்கையின் பரந்துகட்ட காட்சிப் பின்புலத்தில் எடுக்கப்பட்டதாகும். இத்திரைப்படங்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இத்தீவின் தென் பகுதி மக்களின் வாழ்க்கையை துன்பமயமான காதலும் மனவொடிதலுமான ஒருகதை மூலம் வெளிப்படுத்தி நிற்கின்றன. இலங்கையின் ஒழுங்குக் குட்பட்ட சமூக பொருளாதார வாழ்க்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆங்கிலக் காலனித்துவமும் மதமாற்றம் புரியும் மிஷனரிமாரும் ஒன்றுபட்டியங்குகின்றனர். இவ்விருபடங்களும் இம் மாற்றத்தையும் அது சமூகத்தில் கட்டி விழ்த்திவிடும் பொருதல்களையும் குழப்பங்களையும் மக்கள் (அவையோர்) பார்ப்பதற்கு வழங்குகிறது.

இதில் வரும் பேதுரு பிரதான ஆண்பாத்திரம் கிராமத்தில் எல்லாருக்கும் தெரிந்த ஒரு அப்பாவி. அவனது கண்களூடாக, மாறிக் கொண்டிருக்கும் உலகின் போக்கையும் இது காலவரை கெட்டிராத ஏதோ ஒன்றாக அது மாற்ற முறவதையும் நாம் அவதானிக்கிறோம். அவன் இம்மாற்றத்தின் போக்கை தடுமாற்றத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறான். அவற்றை எதிர் கொள்வதில் தாறுமாறாகத் தாக்கப்பட்டு, பின்வாங்கி தனக்குள்ளேயே ஆழமாகச் செல்கிறான். அவனுடைய மனைவி நோனா ஹாமி, இப்படத்தின் பிரதான பெண்பாத்திரம், மாறிவரும் தன்மைக் கேற்ப தன்னை சுதாரித்து, தப்பிக்கொள்ளும் இவள், புதிய உலகின் சவால்களை எதிர்கொள்கிறாள்.

இரு தலைமைப் பாத்திரங்களாக நோனா ஹாமியும், பேதுருவும் இருக்கின்றனர். ஒரு அழகான கிராமப் பெண்ணான முன்னவர் மனோபலமும் தைரியமுடைய பெண்ணாகவும் மாறுகிறாள். பின்னவர் அவளது கணவனாக மாறுகிறார். ஒரு ஆற்றிலுள்ள சிறு தீவில் (இந்த ஆறு படம் முழுவதும் ஓடிக்கொண்டிருக்கிறது) உள்ள கோயில் இடம் பெறும் சடங்கோடு படம் தொடங்குகிறது. இங்கே படத்தின் பிரதான பாத்திரங்கள் எல்லாம் எமக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

சடங்கு விழா நடைபெறும் அன்றைய இரவு உள்ளூர் நிலப்பிரபுவால் நோனா ஹாமி கெடுக்கப்படுகிறாள். இவன் கிராமத்தில் உள்ள அழகான சகல பெண்களையும் சட்ட ரீதியாக தனக்குரிய பலிக்கடாவாகவே பார்க்கிறான். எவ்வாறாயினும் இவள் பேதுருவின்பால் ஈர்க்கப்படுகின்றாள். இவன் பாரம்பரிய நடனக்காரர்கள், குணப்படுத்துவோர் குடும்பத்தை சேர்ந்தவன். அவள் தான் கர்ப்பமுற்றிருப்பதை அறியாது. குடும்பத்தின் விருப்பத்திற்கு எதிராக அவனை விவாகம் செய்கிறாள். அவள் கர்ப்பமுற்றிருப்பதால் ஏற்படும் பிரச்சினை அவர்கள் மேல் பெரிதாகச் கவிந்திருக்க இந்த இளஞ்சோடி விவாகத்துள் நுழைகிறது.

முதலில் தான் கர்ப்பமுற்றதற்கு யார் காரணம் என்பதை சொல்ல மறுக்கும் நோனா ஹாமி, ஈற்றில் உண்மையைச் சொல்கிறாள். பேதுரு உள்ளூர் நிலப்பிரபுவை வெறுக்கத் தொடங்குவதோடு தான் தந்தையாகப்போகும் விஷயத்தைக் கொண்டே அவனுக்கு சவால்விடுகிறான். அவனுக்கும் அவன் மனைவிக்கும் புரியப்பட்ட அநீதியால் விளைந்த வெஞ்சினம், விரக்தியால் அவன் வெறிகொண்டவனாகவே மாறுகிறான். மேலும் பேதுரு முழுக்கிராமத்துக்கும் செய்யப்பட்ட அநியாயம் பற்றியும் அறிய வருகிறான். நிலச்சுவாந்தரின் கையாட்கள் காணிசம்பந்தமாக ஏற்பட்ட தகராறில் ஒரு கிராமத்தவரின் வீட்டுக்கு தீ வைத்து அவனைக் கொன்ற போது அது பற்றி பகிரங்கமாக பேதுரு கதைக்கிறான். இதற்கு பழிவாங்கும் முகமாக நிலச்சுவாந்தர் பேதுரு எந்தவித காரணமும் இன்றி வேலைக்கு வராமையை சாட்டாக வைத்து அவனை பொலிசாரால் கைது செய்விக்கிறான். காலனித்துவ பொலிஸ் உத்தியோகத்திலிருந்து வேலை நீக்கப்பட்ட பேதுரு சிறைக்கு அனுப்படுகிறான்.

அவன் அங்கில்லாத காலத்தில் முதல் குழந்தையான தனது மகனைப் பெற்றெடுத்த நோனா ஹாமி, அவனுக்கு கிரிகோறிஸ் (Gregory என்ற பெயரின் சிங்கள வடிவம்) என்று பெயரிடுகிறாள். பொருளாதார கஷ்டத்துக்குள்ளான அவள் உள்ளூர் சந்தையில் ஒரு வியாபாரியாக வேலை பார்க்கிறாள். அக்காலத்தில் பேதுரு சிறையில் இருந்து வெளிவருகிறான். அவள் வியாபாரத்தில் நல்ல முறையில் தன்னை நிறுவிக் கொள்கிறாள்.

தன்னை முதன்மைப்படுத்தும் மனைவியோடு சமாளிக்க முடியாத பேதுரு, தனக்குள் ஒதுங்கி, அவர்களின் வீட்டு எல்லைக்குள்ளேயே பிரிந்து வாழ்கிறான். மேலும் மூன்று பிள்ளைகள் அவர்களுக்கு கிடைக்கிறது. ஒரு நாள் பிள்ளைகளுக்கிடையே ஏற்பட்ட சண்டை, பேதுருவை தலையிடவைக்கவே கிரிகோரிஸ் வீட்டை விட்டு ஓடி காணாமல் போகிறான். நோனா ஹாமியும் ஊரவரும் அவனது சாவுக்கு பேதுருவே காரணம் எனக் குற்றச் சாட்டுகின்றனர். கிரிகோறிஸின் மறைவு ஏற்படுத்திய கஷேபரத்தின் மத்தியில் நோனா ஹாமினியின் தந்தை இறந்து போகிறார்.

இக்காலத்தில் நாட்டில் ஏற்படும் பெரும் சமூக மாற்றங்களை இந்த இத்திரைப்படம் ஆய்வு செய்கிறது. வீட்டிலிருந்து ஓடிப்போன கிரிகோறிசை கிறிஸ்தவ மிஷனறிமார் கண்டு சுவீகரித்து வளர்த்தெடுத்து அவனோடு கிராமத்துக்கு வருகின்றனர். அவன் இப்போ புதிய அவதாரமாக கிரஹாம் என்ற பெயரோடு படித்த புலமை சார்ந்த மிஷனறியாளராய் வருகிறான். அவனைப் பார்த்ததில் நோனா ஹாமி அளவற்ற சந்தோசம் அடைகிறாள். இந்த தொடர்பு மூலம் மிஷனறிமார் இப்பகுதியில் தமது வேலையைத் தொடக்குகின்றனர். இந்தக் கிராமத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தின் மத்தியில் இவர்கள் வேலையை தொடக்குமாறு கிராமத் தலைவனால் ஏவப்படுகின்றனர். மிஷனறிமார் தம்மோடு கடவுள் பற்றிய போதனையை மட்டும் கொண்டு வரவில்லை, மருந்து, பிள்ளைகளுக்கான கல்வி ஆகியவற்றையும் கொண்டு வருகின்றனர். இவர்களின் தலையீட்டுக்கு ஆதரவாய் இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள், புதிய உத்வேகத்தோடும் தமது பாரம்பரிய நம்பிக்கைகளோடும் கிறிஸ்தவத்தை தழுவிக் கொள்கின்றனர்.

அதிகாரத்தோடு பேரம் பேசும் பரம்பரை வழிவரும் தரகர்கள், தாழ்த்தப்பட்ட சமூகத்தின் புது நம்பிக்கை கண்டு சினங்கொண்ட அவர்கள் தலைவனான ஆபதா (Aabadaa ) வை அழிக்க சதியில் ஈடுபடுகின்றனர். பேதுரு அறிவில்லாமல் இச்சதிக்குள் இழுபட்டு, ஆபதாவை சாவுக்கு இட்டுச் செல்கிறான்.

ஆபதாவின் கொலையானது கிராமத்தில் தொடர் கொலைகளையும் வன்முறையையும் அவிழ்த்துவிடுகிறது. அபதாவைக் கொலை செய்த அஜிதா தொடர்ந்து கிராம ஆராச்சியையும் (கிராமவிதானை – சட்டத்தை நிலைநிறுத்தும் பாரம்பரியத் தகுதி பெற்றவர்) அவருடைய மனைவியையும் கொலை செய்கிறான். பேதுரு இவற்றைக் கண்டதால் கிளர்ந்தெழுந்து இந்த அநியாயங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறான். அவன் கைது செய்யப்பட்டு பத்து வருடம் சிறைக்குப் போகிறான். இக்காலத்தில் நோனா ஹாமி உதவியும் பாதுகாப்பும் தேடி நிலச்சுவாந்தர் வீட்டுக்குப் போகிறாள். காரணம் இப்போது வயத போம், தனியாக இருக்கும் நிலச்சுவாந்தர் மேல் அவளுக்கு அனுதாபம் ஏற்படுகிறது. அவனும்அதற்கேற்க சார்பாக நடந்துகொள்கிறான். இப்பொழுது அவளுடைய இரண்டாவது மகன் ஜோன் நிலச்சுவாந்தருக்கு வேலை செய்யப்போகிறான்.

சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையிலிருந்து வெளிவரும் பேதுரு, தனது பிள்ளைகள் எல்லாம் பெரியவர்களாகி விட்டதை காண்கிறான் மூத்தவனான அகஸ்தினோ தந்தையின்பால் மிகுந்த மதிப்புடையவனாகிறான். ஆனால் பேதுருவோ, கிராமத்தில் அவன் அறிந்திருந்த அனைத்தும் முற்றுமுழுதான விதத்தில் மாற்றமடைந்திருந்ததைக் கண்டு குழப்பமடைகிறான். நிலச்சுவாந்தர் அவனுடைய மகள் பேமா நோனாவுக்கு கலியாணம் பேச, அதற்கு நோனா ஹாமி உடன்படுவதை அறிந்து பேதுரு சகலதும் பாழ்பட்டுப் போனதான நிலை அடைகிறான். யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு வெளியேறி ஆற்றில் உள்ள அந்த சிறு தீவுக்குப் போகிறான். அங்குதான் நோனா ஹாமியை அவன் விவாகம் செய்து அழைத்து போன கோயில் இருக்கிறது. அவன் அந்த இடத்தை துப்புரவு செய்து, அந்த இடத்திலேயே தனது எஞ்சியுள்ள வாழ்நாளைக் கழிக்கப் போவதாக அறிவிக்கிறான். அகஸ்தினோ அங்கு சென்று அவனது தந்தையை வீட்டை விட்டு விரட்டிய காரணத்தை அறிகிறான். அந்த இளைஞன் தாயிலும் நிலச்சுவாந்தர் மீதும் கோபம் கொள்கிறான்.

அந்தத் தீவில் சடங்கு ரீதியான விழாவொன்றுக்கு பேதுரு ஒழுங்கு செய்கிறான். எப்படி இந்த திரைப்படம் ஆரம்பமானபோது கிராமத்தவர் கூடினரோ அவ்வாறே அங்கே கிராமத்தவர் கூடினர். அந்த விழாவின் கௌரவ விருந்தினராக நிலைச்சுவாந்தர் இருக்கிறார். அகஸ்தினோவே தலைமை நாட்டியகாரன், சடங்கு நடக்கும் போது அகஸ்தினோ நிலச்சுவாந்தரை கத்தியால் குத்தி கொல்லுகிறான். பேதுரு தனியாக இருந்து தன்வாழ்க்கையை திரும்பிப்பார்க்கையில் படம் முடிவடைகிறது. இந்த நிகழ்வுச் சூழலின் அர்த்தம்பற்றிச் சிந்திக்கிறான்.

தன்னோடும் கோயிலின் வயதுபோன மதகுருவோடும் சம்பாஷனையில் ஈடுபடுகிறான். தன்னையும், மதகுருவையும், எங்களுக்கு நடப்பவையெல்லாம், விதியினால் உருவாக்கப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்ளும்படி போதிக்கும் மரபையும் கேள்விக்குள்ளாக்குகிறான். ஆதானால் இரண்டு படங்களின் இந்தப் பெயர்கள் பவதுக்கவும் பவகர்மாவும் (வாழ்தலின் துன்பம்) ஆகும்.

பவ துக்க - பவ கர்ம

நடித்தவர்கள் தொழில் நுட்பக்கலைஞர்கள்

கவர்ணா மல்லவாராச்சி

ஐக்சன் அந்தனி

நவீந்ர றந்தெனிய

ஹேம சிறி லியனகே

லலித் சரசந்திர

சோமி ரத்னாயக்க

கமல் அத்தாராச்சி

றோஹன பெத்தகே

டபிள்யூ ஜயசிறி

ஷ்வினிதா வீரசிங்க

மயூரி சமரசிங்க

சிமன் நவகத்தேகம

ஜே. எச் ஜயவர்தன

திரைகதை வசனம்

தர்மசிறி பண்டாரநாயக்க

நெறியாள்கை

தர்மசிறி பண்டாரநாயக்க

படப்பிடிப்பு

லால் விக்ரமாராச்சி

இசை

குணதாஸ கபுகே

படத்தொகுப்பு

சேனக்க நவரத்ன

தயாரிப்பாளர்

வண. விஜிதபுர பன்னானந்த

ஜயரத்த வட்டுவகே

பவதுக்க (முதல்பாகம்)

3 மணித்தியாலம் 25 நிமிடங்கள்

பவகர்ம (இரண்டாம் பாகம்)

2 மணித்தியாலம் 20 நிமிடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மசேன பத்திராஜாவின் திரைப்படம்
## எதிர்காலத்தில் ஏதோ ஒருநாள்
## (மத்துயம் தவஸ)

### வறுமையிலிருந்து விடுதலை பெற அவர்கள் கைக்கூலி பெறும் கொலைகாரர் ஆகின்றனர்
### அவர்கள் பெயர்களை நாம் அறிந்ததில்லை.

கதைச்சுருக்கம்

இத்தர்லிதாலிதான் அவர்கள் கனவுலகு. தம்மிகாவும் லயனலும் திகில் தரப்போகும் பிரயாணம் பற்றியும், சட்ட விரோத நுழைவும் அதனால் தேனும் பாலும் வழியும் அந்த நாட்டில் அவர்களை எதிர்பார்த்திருக்கும் தங்கமான சந்தர்ப்பங்கள் பற்றியும் கதைக்கின்றனர். இந்த விளிம்பு நிலை பாதாள உலகப் பாத்திரங்கள் இருவரும் அரசியல் வன்முறை, சமூக அவலம் ஆகியவற்றை நோக்கி விரியும் மைய அரங்குநோக்கி வருகின்றனர். அங்கே அவர்கள் அழிவையும் துன்பத்தையும் நோக்கி வெகுவிரைவாக மாறிக்கொண்டிருக்கும் சமூகத்தில் நடிகர்களாகவும் வீரதீரம் காதல், திகில், அதிகாரம் ஆகியவற்றைத் தேடும் நடிகர்களாகவும், முகவர்களாவும் இருக்கின்றனர். இது பொலிசாரும் கள்ளரும் என்கிற கதையே ஆயினும் ஒரு முக்கிய வித்தியாசம், அதாவது இங்கே வெற்றி பெறுவோரோ பாதிக்கப்படுவோரோ என்று எவரும் இல்லை.

இத்திரைப்படம் எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து இலங்கையைக் கௌவிக்கொண்ட அரசியல் வன்முறை பற்றி சிந்திக்க வைப்பதாகும். எளிமையான உண்மைபோல் தோற்றம் தருகின்ற இக்கதை வன்முறையில் மூழ்கியுள்ள நாட்டின் பகுதிகளையும் அதன் தேசிய எல்லைகளையும், தேசங்களுக்கிடையேயான அபிலாசைகளையும் ஆற்றலுடன் விளக்கிச் செல்கிறது. சினிமாவுக்கென உருவாக்கப்பட்ட சொல்லாடல் மூலம் பன்முகக்கலாசார, கிராமப்புற அழகுதோய்ந்த ஜனரஞ்சக, நகர்ப்புற, கோளமய கலாசார பொருளாதார நிலைகளையெல்லாம் ஊடுருவிச் செல்லவைக்கிறது. ஜனரஞ்சகமும் நவீன கலாயாக்கமும் ஒன்றிணைக்கப்பட்ட நிலையில், ஏக காலத்தில் திகில், இன்பியல், துன்பியல், அனைத்தும் வெளிக்கொணரப்படுகின்றன.

எதிர் காலத்தில் ஒரு ஏதோ ஒருநாள்

நடிகர்கள் :

சௌமிய லியனகே

வசந்த மொறகொட

ராதா டி மெல்

றுக்ஷன மிஸ்கின்

டி. பி. கங்கொட தென்ன

ஜாயனி சேனநாயக்க

மகிந்த பலநாயக்க

லயனல் விக்ரம

படத்தொகுப்பு : எல்மோ ஹலிடே

இசை : பிரேமசிறி ஹேமதாஸ

கலை நெறியாளர் : லால் ஹரிந்தரநாத்

படப்பிடிப்பு : லால் விக்ரமாராச்சி

தயாரிப்பாளர் : லயனல் விக்ரம

திரைக்கதை, வசனம், இயக்குநர் – தர்மசேன பத்திராஜா

சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org